Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.164/2021

**Depositions of PW- 11**

| Name | திரு.கருத்தப்பாண்டி | Occupation | சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | சுந்தர்ராஜன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of February 2026.

20.02.2026

2ம் எதிரி ஆஜர். 1 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**சாட்சி காணொளி காட்சி மூலம் ஆஜரானார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை ஆயிரம் விளக்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் 12.09.2020 அன்று திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகன் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்ற எண்.1069/2020 வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 21.00 மணிக்கு சம்பவயிடமான ரெங்கநாதபுரம் இருளப்பசாமி கோவில் அருகில் வைத்து சாட்சிகள் முருகன், பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். **வரைபடம் அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான மாயாண்டி, மாயா, கோவிந்தராஜ், மாயக்கண்ணன், பெருமாள், கோவிந்தராஜ் த/பெ.நிலப்பாறை, முருகன், பாலகிருஷ்ணன் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம்

பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்தநிலையில் எதிரிகள் விருதுநகர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சிஆர்எம்பி எண்.1673/2020 படி முன்பிணையில் சென்றதால் அவர்களை தனியாக கைது செய்யவில்லை. இவ்வழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் குமரகுரு என்பவரை விசாரித்து அசா.1 மற்றும் 2ன் காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 23.09.2020 அன்று இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 323, 506(2) இதசவிலிருந்து பிரிவுகள்.294(b), 324, 506(2) இதச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறதல் அறிக்கை அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இவ்வழக்கு கோப்புகள் எந்த தேதியில் எனது மேல்விசாரணைக்காக வைக்கப்பட்டது என்றால் கடந்த 12.09.2020 அன்று 20.20 மணிக்கு மேல்விசாரணைக்காக வைக்கப்பட்டது. வழக்கு கோப்பு எனது மேல்விசாரணைக்கு வைக்கப்பட்டபோது புகார்தாரர் கொடுத்த புகார்மனுவும் அதில் இருந்தது என்றால் புகார் மனுவின் நகல் இருந்தது. மேற்படி புகார் மனுவின் நகலில் எதிரிகள் கொலை மிரட்ல் விடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் கொலை மிரட்டல் விடுத்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சம்பவயிடத்தை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். நான் தயார் செய்த வரைபடத்தின்படி சம்பவமானது ராஜா டீ ஸ்டால் முன்பு நடந்தது என்றால் சரிதான். ராஜா டீ ஸ்டாலானது கோவிலின் தெற்கு பக்கமுள்ளது என்றால் சரிதான். அதுதான் ரெங்கநாதபுரம் செல்லும் வழி என்றால் சரிதான்.

இருளப்பசாமி கோவிலின் வாசலானது கிழக்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி சம்பவயிடத்தை பார்வையிட்டபின் சாட்சிகளை விசாரணை செய்தேனா அல்லது சாட்சிகளை விசாரணை செய்தபின் சம்பவயிடத்தை பார்வையிட்டேனா என்றால் சம்பவயிடத்தை பார்வையிட்டபின்பு தான் சாட்சிகளை விசாரணை செய்தேன். சம்பவமானது ஆட்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதியில் நடந்துள்ளபோதில் நான் தனி நபர் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்தேனா

என்றால் சம்பவயிடத்தில் நேரத்தை பொருத்து ஆட்கள் நடமாட்டம் இருக்கும் இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகளை நான் விசாரணை செய்துள்ளேன். இவ்வழக்கின் 1 முதல் 6 சாட்சிகள் ஒரே குடும்பத்தை சேர்ந்த சாட்சிகள் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகளை காவல்நிலையத்திலா அல்லது சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தேனா என்றால் சாட்சிகளை சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தேன். வழக்கு பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளரை காவல்நிலையத்தில் வைத்து விசாரணை செய்தேன்.

புகார்மனுவில் பெரும்பாலான பகுதி உரிமையியல் பிரச்சனை சம்மந்தமாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் உரிமையியல் பிரச்சனை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் பெரும்பாலான பகுதி என்றால் சரியல்ல. மேற்படி உரிமையியல் பிரச்சனை சம்மந்தமாக நான் புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கினை சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.